மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்

**இரண்டாம் தவணைப் பரீட்சை -2023**

வரலாறு – I

| தரம் - **11** | 33 T I | ஒருமணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல் :**

- ❖ **எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளின் சரியான அல்லது மிகப் பொருதத்மான விடையைத் தெரிவு செய்க.**
- ❖ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத் தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்தவட்டத்தினுள்ளே புள்ளடியை (✕) இடுக.**
- ❖ **அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாகவாசித்துப் பின்பற்றுக.**

1. இலங்கையின் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களுள் மிகப் பழமையான நூல் எது?
   (1) மகாவம்சம் (2) தீபசம்வம் (3) சூழவம்சம் (4) போதிவம்சம்

2. 'தம்பமஸ்ஸ' என்னும் செப்பு நாணயம் பயன்படுத்தப்பட்ட காலம்
   (1) பொலன்னறுவைக் காலம்
   (2) தம்பதெனியாக் காலம்
   (3) கோட்டை காலம்
   (4) அநுராதபுர காலம்

3. இலங்கை வரலாற்றில் முன் வரலாற்றுக் காலம் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம் யாது?
   (1) இக்காலத்தில் மக்கள் கிராமங்களில் வாழ ஆரம்பித்தமை
   (2) சிறு குளங்களை அமைத்து வாழ்ந்தமை
   (3) வீடுகட்டும் தொழில்நுட்பம் ஆரம்பமானவை
   (4) நாகரிகத்திற்கான அடிப்படை இக்காலத்தில் இடப்பட்டமை

4. எட்டாவது உலக அதிசயமாகக் கருதப்படுகின்ற சிகிரியா ஓவியங்கள் வரையப்பட்டமையுடன் தொடர்புடைய மன்னன் யார்?
   (1) இரண்டாம் இராஜசிங்கன்
   (2) முதலாம் காசியப்பன்
   (3) கீர்த்தி ஶ்ரீ நிசங்கமல்லமன்னன்
   (4) குட்டகண்ணஅபயன்

5. புராதன இலங்கையில் கிராமங்கள் பலவற்றை உள்ளடக்கிய பரந்த பிரதேசத்தை நிர்வகித்தவர்
   (1) கிருகபதி (2) கமிக (3) குர்க்கபதி (4) பருமக

6. கிம்ஹதித்த என்ற புராதன துறைமுகம் அமைந்திருந்த நதி எது?
   (1) களுகங்கை (2) ஜின்கங்கை (3) மாணிக்ககங்கை (4) வளவகங்கை

7. புராதனகாலத்தில் இலங்கையைச் செரண்டிப் என அழைத்தவர்கள்

(1) கிரேக்கர் (2) உரோமர் (3) அராபியர் (4) சீனர்

8. பின்வரும் நிரல் I இல் மன்னர்கள் சிலரின் பெயர்களும் நிரல் II இல் மன்னர்களுடன் தொடர்புடைய தளபதிகளின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடைத்தொகுதி

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| 1) | வசபன் | A - நகரகீர்த்தி |
| 2) | முதலாம் விஜயபாகு | B - தேவபதிராஜா |
| 3) | இரண்டாம் பராக்கிரமபாகு | C - சித்தாரும்பிபுத்தநாயக்கா |
| | | D - ரிஷிகிரி |

(1) DBC (2) ACD (3) DCB (4) CDB

9. பாரியகுளங்களை அமைக்கும் போது கவனத்தில் எடுத்த பிரதான விடயம் யாது?

(1) நீர்ப்பரப்பின் அமுக்கத்தினைக் கட்டுப்படுத்துவது
(2) குளக்கட்டினை அமைப்பது
(3) குளக்கட்டினை அரிப்பிலிருந்து பாதுகாப்பது
(4) மழைக்காலத்தில் குளத்தில் சேரும் சேற்றினை வெளியேற்றுவது

10. இலங்கையின் அரசுரிமையில் மாற்றம் ஏற்பட்ட இராசதானிக் காலம்

(1) யாப்பகுவா (2) கம்பளை (3) கோட்டை (4) தம்பதெனியா

➢ **பின்வரும் A தொடக்கம் E வரையிலான கூற்றுக்களை நன்கு வாசித்து 11 ஆம் 12 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - புராதன காலத்தில் இரும்பை உருக்குவதற்கு மரங் என்ற மரத்திக்கரி பயன்படுத்தப்பட்டது.

B - நாணயவெளியீட்டிற்குப் பொறுப்பான அதிகாரி ரூப்பதக்க என அழைக்கப்பட்டார்.

C - தெஹிகஹ அலகந்த பகுதியில் இரும்புச் சூளையை எரிப்பதற்குத் தேவையான வளி ஊதுளை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

D - ஜேத்தவனராமய அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட தங்கநாணயம் ஆபரண கைத்தொழில் வளர்ச்சிக்குரிய சான்றாகும்.

E - நாணயங்கள் மூலம் பிரதானகால பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்பம் தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

11. புராதனகால இரும்புருக்கு கைத்தொழிலுடன் தொடர்புடைய தகவல்களைக் குறிக்கும் விடை?

(1) A, D (2) D, E (3) A, C (4) D, A

12. புராதன கால நாணயப் பயன்பாட்டுடன் தொடர்புடைய விடை?

(1) B, E (2) B, D (3) A, C (4) D, A

13. கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த அரசபரம்பரையினரின் வம்சம் யாது?
(1) இலம்பகர்ணவம்சம் (2) மோரியவம்சம்
(3) மானவர்மன் வம்சம் (4) கலிங்கவம்சம்

14. எருமை, பசு, ஆடு என்பவற்றைக் கொல்வோருக்கு மரணதண்டனை என நான்காம் மகிந்த மன்னன் பொறிப்பித்த கல்வெட்டு எது?
(1) தோணிகல கல்வெட்டு
(2) ஹோப்பிட்டிகம கல்வெட்டு
(3) மிகுந்தலைச் சுவர்க் கல்வெட்டு
(4) கொண்டவெட்டுவான் தூண் கல்வெட்டு

15. புராதனகாலத்தில் நோயாளருக்குத் தயாரிக்கப்பட்ட கஞ்சிக்கு வழங்கப்பட்ட பெயர்?
(1) யவாகு (2) அபுஹம்பு காடி (3) எம்புல்ஹம்பு (4) அத்சுணு

16. அநுராதகம என்னும் கிராமத்தை திட்டமிட்ட முறையில் நகரமாக உருவாக்கிய மன்னன்
(1) வசபன் (2) தேவநம்பியதீசன்
(3) துட்டகைமுனு (4) பண்டுகாபயன்

17. இராசரட்டையின் வீழ்ச்சிக்குப் பின்னர் வடபகுதியில் உருவான பிரதான பிரதேச ஆட்சி அலகின் பெயர் என்ன?
(1) மினிப்பே (2) கோவிந்தமலை (3) வன்னி (4) யாப்பகுவா

18. கம்பளைக் காலத்தின் இறுதிப் பகுதியில் இலங்கையை ஆக்கிரமித்த நாடு எது?
(1) மலாயாகுடாநாடு (2) இந்தியா (3) யாவா (4) சீனா

19. யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன்
(1) விஜயகூழங்கை (2) விக்ரமன் (3) வரோதயன் (4) குலசேகரன்

20. ஆறாம் புவனேகபாகு என்ற கோட்டை இராச்சிய மன்னனின் இளமைக் காலப் பெயர்
(1) அம்புலுகலகுமாரன் (2) சப்புமல் குமாரன்
(3) நிசங்கஅழகேஸ்வர (4) விக்கிரமபாகு

21. போர்த்துக்கேயருடன் உடன்பாடான கொள்கையைக் கடைப்பிடித்த கண்டி ஆட்சியாளன்
(1) சேனாசம்மத விக்கிரமபாகு (2) ஜயவீரபண்டார
(3) முதலாம் இராஜசிங்கன் (4) கரலியத்தபண்டார

22. கண்டி இராச்சியத்தின் கொத்மலை வலைப்பனைப் பகுதியில் வளர்ச்சியடைந்திருந்த கைத்தொழில்
(1) யானைத் தந்த செதுக்கல்
(2) பன்புல் உற்பத்தி
(3) இரும்புருக்குக் கைத்தொழில்
(4) மரச் செதுக்கல் கைத்தொழில்

23. போர்த்தக்கேயருக்கும் கண்டி இராச்சிய மன்னர்களுக்கும் இடையே இறுதி யுத்தம் இடம்பெற்ற இடம் எது?
(1) தந்துரே (2) கன்னொருவ (3) பலன (4) ரந்தெனிவெல

24. கண்டி இராச்சியத்தின் ரட்ட என்னும் பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி
(1) திசாவை (2) கோறளை (3) ரட்டேமஹத்தயா (4) அத்துக் கோறளை

25. கண்டி இராச்சியத்தில் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்கும் அதிகாரத்தினைக் கொண்டிருந்தவர்.
(1) மகாஅதிகாரம் (2) அரசன்
(3) இரண்டாவது அதிகாரம் (4) லியனரால

26. மறுமலர்த்திக் காலத்தில் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டவர்கள் நிரல் I இலும் அவர்கள் கண்டறிந்த பிரதேசங்கள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைத் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடை எது?

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| 1. | வாஸ்கொடகாமா | A - அமெரிக்கா |
| 2. | கிறிஸ்டோபர் கொலம்பஸ் | B - கள்ளிக் கோட்டை |
| 3. | பெர்டினன்ட் மகலன் | C - பிலிப்பைன்ஸ் |
| | | D - மேற்கு இந்தியத் தீவுகள் |

(1) BDC (2) BAC (3) DAB (4) DCB

27. ஒல்லாந்தரின் கீழைத்தேச வர்த்தக மையம் அமைந்திருந்த இடம் எது?
(1) யாவாத்தீவு (2) பாண்டிச்சேரி (3) பத்தேவியா (4) மும்பை

28. கைத்தொழிற்புரட்சி முதன் முதலில் ஏற்பட்ட நாடு எது?
(1) பிரான்ஸ் (2) பிரித்தானியா (3) ஜேர்மனி (4) ஸ்பானியா

29. ஆகாய விமானத்தைக் கண்டறிந்தவர்கள்
(1) டெம்லர் (2) மார்க்கோனி
(3) ரைட் சகோதரர்கள் (4) ஜோர்ச் ஸ்டீவன்சன்

30. 1818 முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்களில் ஒன்று
(1) மன்னனைக் காணமுடியாமை
(2) புதியவரிகள்
(3) அரசின் நிலக் கொள்கை
(4) புதியநீதிமன்றமுறை

31. அமெரிக்க மிஷனரியினர் பிரச்சாரத்தை மேற்கொண்ட பிரதேசம்
(1) கொழும்பு (2) காலி (3) கற்பிட்டி (4) யாழ்ப்பாணம்

32. கொழும்பில் பௌத்த பிரம்மஞான சங்கத்தினை ஆரம்பித்தவர்
(1) ஹென்றிஸ்டீல் ஓல்கொட்
(2) மீகொட்டுவத்தே குணானந்ததேரர்
(3) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர்
(4) அநாகரிகதர்மபால

33. இந்துசமய மறுமலர்ச்சிக்காக வெளியிடப்பட்ட பத்திரிகை
(1) உதயதாரகை (2) விடிவெள்ளி (3) உதயபானு (4) பாதுகாவலன்

34. கொழும்பு சாஹிரா கல்லூரியை ஆரம்பித்தவர்

(1) ஒராபிபாஷா (2) டி. பி. ஜாயா

(3) வலிசங்கே (4) M. C.சித்திலெப்பை

35. இலங்கைத் தேசியசங்கத்தின் முதலாவது தலைவர்

(1) டீ. பி. ஜயதிலக

(2) சேர்.பொன் அருணாசலம்

(3) சேர்.பொன் இராமநாதன்

(4) ஜேம்ஸ்பீரிஸ்

36. புராதனகாலத்தில் அரசர்களுக்குச் சேவையாற்றிய அதிகாரிகளின் வாழ்வாதாரத்திற்காக வழங்கப்பட்ட நிலங்கள்

(1) சேவாபரவேணி என அழைக்கப்பட்டது

(2) நிந்தகம் என அழைக்கப்பட்டது

(3) அத்தம் என அழைக்கப்பட்டது

(4) குத்தகைநிலம் எனப்பட்டது.

37. கோல்புறூக் இலங்கை வரும் போது அரசின் ஏகபோக உரிமையாகக் காணப்பட்ட வர்த்தகப் பொருட்கள்

(1) கருவாடு, உப்பு (2) உப்பு, கறுவா (3) ஏலம்,கராம்பு (4) மீன்,யானை

38. சிங்கோனா பயிரிற்கான கேள்வி குறைவாகக் காணப்பட்டமைக்கான காரணம் யாது?

(1) குவினைன் என்னும் மருந்திற்கான மூலிகைப் பயிராக மாத்திரம் விளங்கியமை.

(2) அதியுயர் பிரதேசங்களில் மட்டுமே விளைந்தமை

(3) போட்டிப் பொருட்கள் காணப்பட்டமை

(4) பயிர்ச் செய்கைக்கு நிழல் தேவைப்பட்டமை.

39. தெங்குப் பயிர்ச்செய்கைக்கான ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்ட இடம்

(1) அகலவத்தை (2) கன்னொருவ (3) தலவாக்கலை (4) லுணுவில

40. பிரதிநிதிகள் சபை, செனட் சபை என இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றம் அமைவதற்குக் காரணமான அரசியல் யாப்பு சீரத்திருத்தம்

(1) டொனமூர் அரசியல் யாப்புசீர்திருத்தம்

(2) மனிங் அரசியல் யாப்புசீர்திருத்தம்

(3) சோல்பரி அரசியல் யாப்புசீர்திருத்தம்

(4) கோல்புறூக் அரசியல் யாப்புசீர்திருத்தம்

(40 x 2 = 80 புள்ளிகள்)